(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 65.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஒக்தோபர் 17, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

837/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி.தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் சொந்தமான பாடசாலைகளுக்கு மத்தியில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதும், குடிநீர் வசதி, மலசலகூட வசதி, ஆய்வுகூட, நூலக மற்றும் விளையாட்டு வசதிகளைக் கொண்டிராததுமான பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையினதும் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அதற்காக எடுக்கப்படும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

852/2023

கௌரவ காமினி வலேபொட,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ரன்மினிதென்ன, மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி-சினிமா பூங்கா கடந்த அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இப்பூங்கா பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படாமையினால் தற்போது அங்குள்ள வளங்கள் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி டெலி-சினிமா பூங்காவை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பூங்காவில் படப்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றனவா என்பதையும்;

(iii) மேற்படி பூங்காவிலுள்ள வளங்களைப் பாதுகாப்பதற்காக நடைமுறையிலுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

872/2023

கௌரவ ரோஹண பண்டார,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம் நகரில் "அவந்தி தேவி" எனும் பெயரில் சிறுமியர் இல்லமொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி சிறுமியர் இல்லத்தில் தற்போது பராமரிக்கப்பட்டு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சிறுமியர் இல்லத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1333/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி மற்றும் பழங்களை ஏற்றிச் செல்லும் போதும் விற்பனை செய்யும் போதும் ஏற்படுகின்ற அறுவடைக்குப் பின்னரான சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சேதமானது நிதிசார் மற்றும் அளவுசார் ரீதியில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் அறுவடையின் பின்னரான சேதங்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1719/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையில் இன்றளவில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை அவ்வூழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காகவும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காகவும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காலப்பகுதியில் சபைக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப் பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவ்வூழியர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை என்பன யாவையென்பதையும்;

(iii) இலங்கை மின்சார சபையில் போதியளவு ஊழியர்கள் உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பதனைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2018/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் அடிப்படையில் —

(i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் சமுர்த்தி நிவாரண உதவி பெறுவோர் எண்ணிக்கை;

(ii) மேற்படி காலப்பகுதியில் மாவட்டத்தில் வலுவூட்டப்பட்ட சமூர்த்தி நிவாரண உதவி பெறுவோர் எண்ணிக்கை;

(iii) அவ்வாறு வலுவூட்டப்பட்டதன் காரணமாக சமுர்த்தி நிவாரண உதவித் திட்டத்திலிருந்து நீக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண உதவி பெற்றவர்களின் எண்ணிக்கை;

(iv) நீக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண உதவி பெற்றவர்களுக்குப் பதிலாக புதிதாக சமுர்த்தி நிவாரண உதவி பெறுவதற்கு தகுதி பெற்றுள்ள ஆட்களின் எண்ணிக்கை;

யாதென்பதை தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவியை துரிதமாக வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2695/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ளை புனிதபூமி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணிகளை இழந்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் இதுவரை காணித்துண்டுகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி காணித்துண்டுகளைப் பெற்றுக்கொண்ட சிலர் அவற்றை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்துள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2884/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது மதுபானம் உற்பத்தி செய்கின்ற சட்டரீதியான நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர், முகவரி, நிறுவன உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி என்பன வெவ்வேறாக யாவை;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மேற் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தினாலும் செலுத்தப்பட்டுள்ள வரித் தொகை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவை வரி உள்ளதா;

(v) ஆமெனில், அவ்வரித் தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3667/2023

கௌரவ (சட்டத்தரணி) ரஊப் ஹகீம்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004.12.27 ஆம் திகதி இலங்கை மகாவலி அதிகார சபையினால் விக்டோரியா வதிவிட முகாமைத்துவ அலுவலகத்தில் நடத்தப்பட்ட காணிக் கச்சேரியில் காணி பெறுநர்களாக தெரிவு செய்யப்பட்ட 44 பேருக்கு ரஜவெல்ல மற்றும் ரஜவெல்ல – வடக்கு ஆகிய குடியிருப்புகளில் 10 பேர்ச்சஸ் மற்றும் 15 பேர்ச்சஸ் அளவிலான காணித் துண்டுகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) 10 பேர்ச்சஸ் மற்றும் 15 பேர்ச்சஸ் அளவிலான காணித் துண்டுகளுக்கு முறையே மூன்று இலட்சம் ரூபா மற்றும் நான்கு இலட்சம் ரூபா வீதம் மதிப்பீட்டுப் பெறுமதிகளைச் செலுத்துவதற்கு பணிக்கப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) உரிய காணி பெறுநர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டுப் பெறுமதிகளை அறவிட்டுக் கொண்டு, அக்காணிகளுக்கு துரிதமாக உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்,— இலங்கையில் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை எடுத்துக் கூறுவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 57/2023

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ சமன்பிரிய ஹேரத்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

கௌரவ டீ. பி. ஹேரத்

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ எச். நந்தசேன

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,— உயிர்த்த ஞாயிறு தினம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிரித்தானிய "செனல் 4" அலைவரிசையினால் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான பாராளுமன்ற விசேட குழு,— 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி 269 பேரின் உயிர்களைக் காவுகொண்டு 500 இற்கும் மேற்பட்டவர்களை காயப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைத் தாக்குதல் மூலம் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதுடன் அது தொடர்பில் ஆராய்வதற்கு சனாதிபதி விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு மட்டங்களிலான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதனாலும்;

2023 செப்தெம்பர் 05 ஆம் திகதி பிரித்தானியாவின் "செனல் 4" தொலைக்காட்சி அலைவரியினால் ஒளிபரப்பப்பட்ட "Sri Lanka's Easter Bombings – Dispatches" எனும் நிகழ்ச்சியின் மூலம் இராணுவ உளவுப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகளும், சில அரசியல்வாதிகளும் 2019.04.21 ஆம் திகதி தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைப் பேணியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதனாலும்;

அப்போதைய சட்டமா அதிபர் சனாதிபதி சட்டத்தரணி திரு. தப்புல டி லிவேரா அவர்களுக்கு, அனைத்துச் சான்றுப் பொருட்கள், விசாரணை அறிக்கைகள், சாட்சிகள் மற்றும் ஏனைய அத்தகைய தகவல்களுக்குமான நேரடி பிரவேசத்தைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை இருந்த போதிலும், அவர் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற அண்மித்திருந்த நிலையில் 2021 மே 17 ஆம் திகதி "நியூஸ் பெஸ்ட்" உடன் நடாத்திய கலந்துரையாடலில் இத் தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டமொன்று காணப்படுவதாகவும், நௌபர் மௌலவி இந்த சதித்திட்டத்தின் முக்கிய நபரொருவராகவும் குழுத் தலைவராகவும் இருந்த போதிலும், அவர்தான் பிரதான சூத்திரதாரி என்பதை திட்டவட்டமாகக் கூற முடியாது எனவும், சஹ்ரான் ஹஷீம் தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ள தீர்மானித்த போதிலும், அவரும் இந்த சூத்திரதாரிகளில் ஒருவர் மட்டுமே எனவும் தெரிவித்துள்ளதனாலும்;

இதற்கமைய உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாத சில தகவல்களை அப்போதைய சட்டமா அதிபர் சனாதிபதி சட்டத்தரணி திரு. தப்புல டி லிவேராவும் அறிந்திருந்தார் என்பதற்கான நியாயமான சந்தேகம் எழுவதுடன் அவரது கூற்றுக்களையும் அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த விடயங்களையும் முறையாக வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதனாலும்; மற்றும்

"செனல் 4" வீடியோ வெளிவந்ததையடுத்து 2023.09.08 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்கள், பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது ஒலிப்பதிவொன்றைச் சமர்ப்பித்து இச் சம்பவம் தொடர்பில் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த நீதிபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் குற்றச்சாட்டினை முன்வைத்ததோடு யூடியுப் மூலம் வீடியோக்களை வெளியிடுகின்ற அஜித் தர்மபால என்பவரும் பல்வேறு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு சர்ச்சைக்குரிய விடயங்களை சமூகமயப்படுத்தியுள்ளதனாலும்;

மேற்படி “செனல் 4” நிகழ்ச்சியின் மூலமும் ஏனைய தரப்பினர்களாலும் குற்றஞ்சாட்டப் படுகின்ற அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைப் பேணியதற்கான அல்லது சதித்திட்டம் தீட்டியதற்கான அல்லது ஏதேனும் செயலைப் புரிந்ததற்கான அல்லது புரியாதிருந்ததற்கான விடயங்கள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்கும் இதுவரை இலங்கைப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்குமாக பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

   (ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், குழுவானது பதினொரு (11) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

   (ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

   (இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

   (ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், மற்றும் பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது கூடுவதற்கும்;

   தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து இரண்டு (02) மாதங்களினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.

பலபிட்டிய ஸ்ரீ ராஹுலாராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்ஷு கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

3.

ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2347/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*7.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (235 ஆம் அத்தியாயமான) திருத்தப்பட்ட சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 107அ(1) ஆம் பிரிவின் சுங்கத் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 28 ஆம் திகதிய 2329/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பில் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2023 யூன் 16 ஆம் திகதிய 2336/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 மே 31 ஆம் திகதிய 2334/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 16 ஆம் திகதிய 2336/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 30 ஆம் திகதிய 2338/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 மே 31 ஆம் திகதிய 2334/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூலை 13 ஆம் திகதிய 2340/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2329/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூலை 25 ஆம் திகதிய 2342/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2, 12, 22 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைக்கு குடிபானமல்லாத ஸ்பிரித்துகளை இறக்குமதி செய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துதல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 16 ஆம் திகதிய 2336/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2023)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 யூன் 30 ஆம் திகதிய 2338/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2023)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1995 ஆம் ஆண்டுக்கான 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 4(1)(ஊ) ஆம் பிரிவின் கீழ், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27, 36, 37, 39, 40 மற்றும் 64 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினதும் கலந்தாலோசனையுடன், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 07 ஆம் திகதிய 2339/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப்பொறுப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*32.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் உடன்பாட்டுடன் பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 21 ஆம் திகதிய 2341/63 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2347/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.10.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*35.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

36.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

61.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

62.

இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

63.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*64.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.